# 86 மருத்துவப் பணியிடங்களுக்கு கலந்தாய்வு!

## ஒன்றிய அமைச்சருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம்!


சென்னை, நவ.2-
முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒன்றிய அரசு சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர்.மான்சுக் மாண்டாவியா அவர்களுக்கு எழுதிய நேர்முக கடிதத்தின் அடிப்படையில் 86 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தி நிரப்பப்படும்.

தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பில், அகில இந்திய ஒதுக்கீட்டில் 16 மருத்துவ இடங்களும், நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் 50 மருத்துவ இடங்களும், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் 3 மருத்துவ இடங்களும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட சுயநிதி மருத்துவக் கல்லூரிகள் 17 மருத்துவ இடங்களும் காலியாக உள்ளன. காலியாக உள்ள மருத்துவ இடங்களுக்கு 31.10.2023 முதல் 07.11.2023 வரை அகில இந்திய கலந்தாய்வு நடைபெறும், மற்றும் மாநில ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு 07.11.2023 முதல் 15.11.2023 வரை நடைபெறும்.

எனவே மாணவர்கள் tnmedicalselection.org என்ற இணையதளத்தை தொடர்ந்து பார்வையிடுமாறு தேர்வுக் குழு செயலாளர் மரு.அருணலதா தெரிவித்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் மாலை (31.10.2023) தலைமைச் செயலகத்தில், அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தினை விரிவுப்படுத்தும் வகையில், நிதி வசதி குறைவாக உள்ள 2,000 திருக்கோயில்களில் ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 40 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆர்.அம்பலவாணனிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சுதந்திரப் போராட்ட தியாகி என்.சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம்!

# ஆளுநர் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

## கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு வலியுறுத்தல்!

சென்னை, நவ. 1-
சுதந்திரப் போராட்ட தியாகி என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டமளிக்கும் ஒப்புதலில் கையெழுத்திட மறுத்துள்ள தமிழக ஆளுநர் அவர்கள் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு கேட்டுக் கொள்கிறது.

இது குறித்து கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு ஒருங்கிணைப்பாளர் சோ.சுரேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விடுதலைப் போராட்டக் காலத்தில் 5 ஆண்டுகள் சுதந்திர இந்தியாவில் எளிய மக்கள் வாழ்வு ஏற்றமுற, 4 ஆண்டுகள் சிறை வாழ்க்கையை அனுபவித்தவர் என்.சங்கரய்யா அவர்கள் விடுதலை வேட்கையின் காரணமாக வகுப்பை புறக்கணித்தால், தேர்வெழுத முடியாமல், பட்டப்படிப்பை தொடர முடியாத சூழலுக்கு உள்ளானவர். வாழும் வரலாறாக, ஒப்பில்லா சமூக களப் பேராளியாக, இளைஞர்களின் போற்றத்தக்க முன்மாதிரியாக திகழும் நூற்றாண்டுகளைக் கடந்த மகத்தான சுதந்திர போராட்ட தியாகிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டுமென தமிழக முதல்வர் பரிந்துரைத்ததன் அடிப்படையில், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சனநாயக அமைப்புகளான செனட் மற்றும் சிண்டிகேட் ஆகியவை ஒருமனதாக, என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டதை, தமிழக ஆளுநர் அவர்கள் கையெழுத்திட மறுத்திருப்பது வருந்தத்தக்கது. 80 ஆண்டுகளாக சாதாரண ஏழை, எளிய மக்களின் துயரைப் போக்க ஓயாத குரலில் ஒலித்துக் கொண்டிருக்கும் என். சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்குவதன் மூலம் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வரலாற்றில் ஒரு நீங்கா புகழை நிச்சயம் பெறும்.

எனவே, தமிழக ஆளுநர் அவர்கள் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2023நவம்பர் மாதம் 17ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை போர்ச்சுக்கல் நாட்டில் நடைபெற உள்ள வாகோ உலக கிக்பாக்சிங் (சீனியர் & மாஸ்டர்) போட்டியில் இந்தியா சார்பில் கலந்துகொள்ள உள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 8 வீர – வீராங்கனைகளுக்கு விமானக் கட்டணம், தங்குமிட செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவுக் கட்டணமாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் நிதியுதவியாக தலா ரூபாய் 1.50 இலட்சம் வீதம் ரூபாய் 12 இலட்சத்திற்கான காசோலைகளை நேற்று முன்தினம் (31.10.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, உடனுள்ளனர்.

# தமிழ்நாட்டில் 4 நாட்களுக்கு கனமழை!

சென்னை, நவ.2-
தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் 4 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு வங்கக் கடல் பகுதியில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. 02.11.2023 அன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் 05.11.2023 வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

